*கவனிக்க.-2021.12.31 ஆந் திகதிய 2261 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2262 - 2022 ජනවාරි මස 07 වැනි සිකුරාදා - 2022.01.07

*2262 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1838* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1846* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, சனவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, சனவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1-B 82305-5,403 (2022/ 01)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலும்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலும். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் III ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (I)

1925/37 ஆம் இலக்க மற்றும் 2015.07.28 ஆந் திகதியில் இருந்து அமுலில் உள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை III ஆம் தர உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2022, ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடைபெறும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

2. இந்தப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுக்க விதிமுறைகள் மேற்படி பிரகடனத்தின் அட்டவணை III இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதி கருதி அப்பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுக்க விதிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

3. **பரீட்சை செயல்முறை.-** எழுத்துமூலப் பரீட்சை :

| பாட இலக்கம் | பாடம் | புள்ளிகள் | நேரம் (மணி) |
|---|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் | 100 | 1 1/2 |
| 02 | நிதி ஒழுங்குகள் | 100 | 1 1/2 |
| 03 | கல்வி சீர்திருத்தம் மற்றும் கல்விச் சட்டம் | 100 | 02 |
| 04 | ஆங்கில மொழி | 100 | 02 |

4. **பாடத்திட்டம்** :

| பாட இலக்கம் | பாடம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவம் மற்றும் தாபன செயற்பாடுகள் | அரச தாபன விதிக்கோவையின் I, II, III, IV, V, VII, VIII, IX, XII, XIII, XIV, XXIV, XXVII, XXX மற்றும் XXXI ஆகிய வாசகங்கள் மீது விசேட கவனத்துடன் அரசாங்க சேவை ஆணைக்குழுச் சபையின் செயற்பாட்டு ஒழுங்கு விதிச் சட்டங்கள் I, III, IV, V, VI, VIII, X மற்றும் XII ஆம் வாசகத்தின் மீது விசேட கவனத்துடன் |
| 02 | நிதி ஒழுங்குக் கோவை | அரச நிதி ஒழுங்குக் கோவையின் 1 ஆம் பகுதியின் I, II, V, VIII, XII மற்றும் XIV வாசகங்கள் மீது விசேட கவனத்துடன் |
| 03 | கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம் | பரீட்சார்த்திகளின் கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பில் அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது:<br>(i) 1972 ஆம் ஆண்டின் கல்வி மறுசீரமைப்பு (கல்வியின் புதிய வழிகாட்டல்)<br>(ii) 1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளைப் பத்திரம்<br>(iii) 1992 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் I ஆவது அறிக்கை |

| *பாட இலக்கம்* | *பாடம்* | *பாட உள்ளடக்கம்* |
|---|---|---|
| *03* | *கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம் (தொடர்ச்சி)* | (iv) *1997 ஆம் ஆண்டின் புதிய கல்வி மறுசீரமைப்பு*<br>(v) *1999 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்பு (ஆரம்ப, இடைநிலை மற்றும் க. பொ. த. (உ. த.))*<br>(vi) *1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சை (மறுசீரமைப்பு) சட்டத்தினால் மறுக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சைச் சட்டம்*<br>(vii) *1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்*<br>(viii) *1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவனச் சட்டம்*<br>(ix) *1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு சபைச் சட்டம்*<br>(x) *1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபைச் சட்டம்*<br>(xi) *13 ஆவது சீர்திருத்தத்திற்கு மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக 3 ஆவது வாசகம் தொடர்பாக விசேட கவனத்துடன் இலங்கை அரசியல் அமைப்பின் யாப்பு*<br>(xii) *கல்விக்குரியதாக மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள கொள்கைப் பிரகடனம்* |
| *04* | English Language | This is to assess the English Language Competence of the following subject areas.<br>- **English Grammar**<br>Tense and Number, Sentences (Simple/ Compound/ Complex/Compound Complex), Relative Clauses, Adjectives and Adverb, Prepositions.<br>- **Communication Skills**<br>General Greetings and Introductions, Giving and getting information, Advising, Suggesting and Expressing and Opinions, Telephone skills, Interview skills, Meetings.<br>- **Writing Skills**<br>Internal modes of communication, Formal correspondence skills, Writing Descriptions/ Explanation, Summery writing skills, Report writing skills. |

*பி. கு.*- பரீட்சார்த்தியினால் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்காக அவ்வவ் வினாத் தாள்களிலிருந்து 40% புள்ளிகளைப் பெற வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு ஒரு தடவையில் ஒரு பாடத்திற்கு அல்லது அதனைவிட மேற்பட்ட எண்ணிக்கைக்குத் தோற்ற முடியும்.

***குறிப்பு***.- பட்டம், பட்டப்பின் டிப்ளோமா அல்லது பட்டப்பின் பட்டம் ஆங்கில மொழி மூலம் கற்றிருப்பின் இந்த வினைத்திறன்காண் தடைதாண்டலின் கீழ் உள்ள ஆங்கிலப் பாடத்தில் சித்தியடையும் தேவையில் இருந்து விடுவிக்கப்படும்.

5. **பரீட்சையின் மொழிமூலம்** :

இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பிறகு மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

6. விண்ணப்பப்படிவத்தை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக A4 அளவுடைய கடதாசியில் இருபுறமும் பாவித்து இலக்கம் 01 தொடக்கம் 05 வரைக்கும் முதலாம் பக்கத்திலும் மிகுதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிட வேண்டும். மாதிரிப்படிவத்திற்கு ஒவ்வாது சரியாகப் பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவம் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதால், விண்ணப்பப்படிவங்களை முன்னிலைப்படுத்துவதற்கு முன் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு இசைவானதா என்பதும், அனைத்து தகவல்களும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்துப் பார்க்க வேண்டும். அத்துடன் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அவ்விடயங்களை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதா என்பதை பற்றியும் கவனத்திற் கொள்வதோடு விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை தம்மிடம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

7. இந்த பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றுவதற்கு பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார்.

8. பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்.- விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். பரீட்சைக்குரிய விதிமுறைகளுக்கு அமைய எப்பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்ற பிழையான தகவல்களை எவரேனும் வழங்கியுள்ளதாக தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சை இடம்பெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்போ எந்தவொரு தருணத்திலும் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

9. பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்கும் போது தாம் தோற்றும் அனைத்து பாடங்களுக்காகவும் மண்டப பொறுப்பாளர் திருப்தியடையக் கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்த கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த நிராகரிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தது தொடக்கம் பரீட்சை நிறைவடைந்து வெளியே செல்லும் வரை பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாதிருக்க வேண்டும். ஏதேனும் அடிப்படையில் எதிர்ப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படும். இது எவ்வாறாக இருப்பினும் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாமையினால் அவ்வாறான பரீட்சார்த்திக்கு பெறுபேறுகள் வழங்கப்படமாட்டாது.

10. விண்ணப்பப்படிவங்கள் 2022.02.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். இத்தினத்திற்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (I)" எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

11. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் கூடியவர்கள் மாத்திரம் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமன்று அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்டுள்ள பரீட்சைக்

கட்டணங்களைச் செலுத்தி அதற்குரிய ரசீதுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவதும், விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டதுடன் அது தொடர்பில் குறிப்பிட்டு அறிவித்தல் ஒன்று பத்திரிகை விளம்பரம் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளம் ஊடாக பிரசுரிக்கப்படும். அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை இடம்பெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் 2 அல்லது 3 நாட்களுக்குள் தங்களது அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையெனின் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத் தர வேண்டும். அவ்வாறு அறியத்தரும் போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கப்பட்ட பரீட்சையின் பெயரையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே உள்ளவராக இருப்பின் அதற்குரிய விடயங்களுடன் அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை அனுப்பக்கூடிய பெக்ஸ் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதம் ஒன்றை விளம்பரத்தில் காணப்படும் பெக்ஸ் இலக்கத்திற்கு முன்னிலைப்படுத்தி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்தில் வினவும் சந்தர்ப்பத்தில் தேவை ஏற்படுமாயின் விண்ணப்பதாரியின் எதிர்பார்ப்பை உறுதிப்படுத்துவதற்காக தன்னிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்துவது பொருந்துமாயின் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிடும் போது பதிவுசெய்யப்பட்ட ரசீதையும் தயாராக வைத்துக்கொள்வது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்திற் கொள்ள வேண்டும்.

12. மேற்படி 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தவறும் பரீட்சார்த்தியினால் பிறகு முன்னிலைப்படுத்தப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சை தொடர்பான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். யாதொரு நிறுவனத்தின் மூலமாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தைத் நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தி அனுப்ப வேண்டும். பரீட்சைக்காக தோற்றும் முதலாவது தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட தமது அனுமதிப்பத்திரத்தை முன்னிலைப்படுத்தத் தவறும் விண்ணப்பதாரருக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

14. பரீட்சைக் கட்டணம்:

(அ) இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

(i) முதற் தடவை கட்டணம் ஏதும் அறவிடப்படமாட்டாது.

(ii) அதன் பிறகு ஒரு தடவைக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும்.

முழுப் பரீட்சை கட்டணம் ரூபா 500.00
ஒரு பாடத்திற்கு மாத்திரமான கட்டணம் ரூபா 250.00

(ஆ) இந்தப் பரீட்சைக் கட்டணமானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரசாங்க வருமானக் கணக்கில் வைப்பிடக்கூடியவாறு நாட்டிலுள்ள தபாலகங்கள்/உப தபால் அலுவலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலக அலுவலகங்களுக்கு நிதி செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை அதற்குரிய இடத்தில் கழன்று விடாமல் ஒட்ட வேண்டும். மேலும் அதன் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(இ) பரீட்சைக் கட்டணம் தொடர்பாக காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்காக மாற்றப்படமாட்டாது.

15. பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகளைக் கொண்ட ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட முறையில் பெறுபேறு ஆவணங்கள் பெற்றுக்கொடுப்பது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படமாட்டாது.

16. பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அந்த விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

17. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில், மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடற்ற நிலைமைகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

18. இவ்வறிவித்தலின் ஊடாக தழுவப்படாத விடயங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் III ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (I)**

Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service - 2021 (I)

விண்ணப்பப்படிவங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கிணைப்பு தாபன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு நிறுவனத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். (பரீட்சையின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(குறிப்பிட்ட கட்டத்தில் எழுதவும்.)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) சேவையாற்றும் கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி/ ஆசிரிய மத்திய நிலைய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் :----.
(ii) சொந்த முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. தொலைபேசி இலக்கம் :
(i) கையடக்க : ☐☐☐☐☐☐☐☐☐☐
(ii) நிலையான : ☐☐☐☐☐☐☐☐☐☐

4. (i) தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பால் நிலை: ஆண் - 0
பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தினை கூட்டுக்குள் எழுதவும்)

5. அறிவித்தலில் இரண்டாவது வாசகம் (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :

| பாடங்கள் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

6. (i) பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) பதவிப் பெயர் :----.

7. இதற்கு முன்னர் இந்தப் பரீட்சைக்கு முழுமையாகவோ அல்லது அதிலொரு பகுதிக்கோ தோற்றியிருப்பின் அந்த பாடங்களும் தோற்றிய ஆண்டு மற்றும் மொழியையும் குறிப்பிடவும்.

| பாடங்கள் | வருடம் | மொழி | பரீட்சைச் சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

8. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் உரித்தாயின் அதற்குரிய விபரங்கள் :

(i) பற்றுச்சீட்டு இலக்கம் :----.
(ii) செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(iii) திகதி :----.
(iv) செலுத்தப்பட்ட கட்டணம் :----.

| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும். |
|---|

9. மேற்குறிப்பட்ட விடயங்கள் உண்மையானது எனவும் வர்த்தமானி அறிவித்தலில் 05 ஆவது வாசகத்திற்கு அமைவாக குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலங்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமை இருப்பதாகவும் உறுதி செய்கின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படுவதாக தெரிவிக்கின்றேன்.

திகதி :----. --------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்

எமது தேசிய கல்வியியற் கல்லூரியில்/ ஆசிரியர் கல்லூரியில்/ ஆசிரிய மத்திய நிலையத்தின் உத்தியோகத்தர் மற்றும் நான் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான திரு./ திருமதி/ செல்வி ................................................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் மற்றும் குறித்த பரீட்சை கட்டணத்தை செலுத்தியுள்ளார் மற்றும் குறிப்பிட்ட பரீட்சை கட்டணத்தை செலுத்தி அதற்குரிய சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

---------------------,
கையொப்பம் உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை
(அருகிலுள்ள பணி உத்தியோகத்தர்)

பெயர் :.....................
பதவி :.....................
முகவரி :.....................
திகதி :.....................

11. பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.

மேற்படி விடயங்களுக்குரிய பரீட்சார்த்திக்கு இந்தப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதி உள்ளதென்பதையும் வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆவது வாசகத்திற்கான அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற அவருக்கு தகுதி உள்ளது என்பதையும் நான் உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டதாக/ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-------------------------
பீடாதிபதியின்/ ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபரின்/
மத்திய நிலையப் பொறுப்பாளரின்
கையொப்பமும் பதவிப்பெயரும்.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)
(பொருத்தமற்ற வசனத்தை நீக்கிவிடவும்.)

01-17

---

எனது இலக்கம் : DNA 2 / MA7/ 3/ 16

## தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சியளித்தல் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சியளித்தல் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமையுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிடங்களின் எண்ணிக்கை 06 ஆகும். இவற்றில் 70% ஆனவை திறந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்க்கப்படவுள்ளன.

01. இப்பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படுவது தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்தவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சித் தரத்திற்காகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.02.07 ஆந் திகதியாகும். இப்பரீட்சையானது கொழும்பில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

02. **பதவியில் ஒப்படைக்கப்படும் பணிகள் :**

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்கள்* | *பணிகள்* |
|---|---|
| சுவடி மீள்வடிவமைப்பாளர் | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் சுவடிகள் மற்றும் செய்தித்தாள்களில் உள்ள தகவல்களை வேறு ஊடகத்தில் வைப்பதற்காக சுவடிகளை மீள்வடிவமைத்தல். நுண் புகைப்படமாக்கல் செய்யப்பட்ட புகைப்படங்களின் தரத்தைப் பரீட்சித்தல், திணைக்களத்தின் புகைப்படமெடுத்தல் நடவடிக்கைகள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப அவசியப்படும் ஆவணங்களை மீள்வடிவமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளல் பிரதம சுவடி மீள்வடிவமைப்பு உத்தியோகத்தர், தேசிய சுவடிகள் கூட பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் (தொழில்நுட்பம்), செவிப்புல கட்புல மற்றும் மின் ஆவணங்கள்) மற்றும் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பதவிக்கு உரித்தான ஏனைய பணிகள் |

03. **சேவை நிபந்தனைகள் :**

(அ) அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கு 2018.06.05 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதியில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணங்களுக்கும் அவ்வொழுங்குவிதிகளுக்கு மற்றும் சேவைப் பிரமாணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவையின் மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் சுவடி மீள்வடிவமைப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பதவி ஓய்வூதியத்துடன் கூடியது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எதிர்வரும் காலங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். மேலும் தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(இ) இப்பயிற்சியளிக்கும் தரத்தில் சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியெய்ததாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சுவடி மீள்வடிப்பமைப்பாளர் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படுவர். இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடி மீள்வடிவமைப்பாளர் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடங்களினுள் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கு மேலதிகமாக திணைக்களப் பரீட்சையிலும் சித்தியெய்தல் வேண்டும்.

(ஈ) தமக்கு வழங்கப்படும் பதவியில் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரிகளின் நியமனம் இரத்துச் செய்வதற்கு தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** : அசராங்க நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இற்கமைய, தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடி மீள்வடிவமைப்பாளர் (பயிற்சியளிக்கும் தரம்) பதவிக்குரிய கொடுப்பனவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

முதலாம் வருடத்திற்காக மாதாந்தம் : ரூபா 27,140.00

இரண்டாம் வருடத்திற்காக மாதாந்தம் : ரூபா 27,440.00

இரண்டு வருட பயிற்சிக் காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ததன் பின்னர் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தும் பயிலுநர்கள் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடி மீள்வடிவமைப்பாளர் III ஆந் தரத்துக்கு நியமிக்கப்படுவார். முன்னைய சுற்றறிக்கையின்படி அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் (MN3-2016) ரூபா 31,040-10×445 - 11 × 660 - 10 × 730 - 10 ×750 - ரூபா 57,550.00 (ஆரம்ப சம்பளப் படிமுறை - ரூபா 31,040.00) ஆகும். இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படும் ஏனைய படிகளுக்கும் தாங்கள் உரித்துடையவராவீர்.

05. **இணைத்துக்கொள்வதற்கான தகைமைகள்** :

| பதவி | (அ) கல்வித் தகைமைகள் | (ஆ) தொழில்சார் தகைமைகள் | (இ) அனுபவம் |
|---|---|---|---|
| சுவடி மீள்வடிவமைப்பாளர் (பயிற்சித் தரம்) | க. பொ. த. (சா.தர) பரீட்சையின் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) ஒரே தடவையில் சித்தியெய்தல் மற்றும் இரு தடவைகளுக்கு மேற்படாத எண்ணிக்கையில் ஆங்கில பாடத்தில் சித்தியெய்தியிருத்தல்.<br>அல்லது<br>க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், இணைந்த கணிதம், தூய கணிதம் மற்றும் பிரயோக கணிதம் ஆகிய இரண்டு (02) பாடங்களுடன் ஒரே நேரத்தில் மூன்று பாடங்களில் (சதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல். | ஏற்புடையதற்றது | ஏற்புடையதற்றது |

(ஈ) **உடற் தகைமைகள்** : எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) **ஏனைய** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவிப் பதவியை வகிக்கும் ஒருவர் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவராவார் ;

(iv) பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக அவசியப்படும் தகைமைகளை விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) **வயதெல்லை** : விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதுக்கு குறையாமலும் முப்பது வயதினை விட மேற்படாதிருத்தலும் வேண்டும். இிற்கமைய 2004.02.07 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1992.02.07 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதி காணப்படுபவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை காணப்படுகின்றது.

06. **ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சித் தரத்திற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகள் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப திறந்த ஆட்சேர்ப்பிற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்பயிற்சியிளிக்கும் தரத்தில் சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியெய்ததாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்தன் பின்னர் சுவடி மீள்வடிவமைப்பாளர் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படுவர். பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்யத் தவறும் பயிலுநர்கள் காணப்படின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலம் தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

(அ) எழுத்துப் பரீட்சை

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்டு எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய குறைந்தபட்ச புள்ளியின் அளவு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| பாடங்கள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. தொழில்நுட்பம் (பதவிக்கு உரித்தான விடயத்துடன் கூடிய பரீட்சையாகும்.) | 02 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சார்த்திகள் சகல வினாப் பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதோடு அனைத்து வினாக்களுக்கும் ஒரே மொழியில் மாத்திரம் விடையளித்தல் வேண்டும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(i) பரீட்சை பெறுபேறுகள் - பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட வகையில் பெறுபேறுகளை அறிவிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் அல்லது அறிவிக்கப்படும்.

07. **பரீட்சைக்கான பாடத்திட்டம்** :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | பரீட்சார்த்தியிடம் காணப்படும் பொது நுண்ணறிவு, பகுத்தறியும் திறன், கருத்துரைப்பு, எண்ணிக்கை சார்ந்த திறன்கள் மற்றும் புரிந்துகொள்ளும் திறன் ஆகியவற்றை அளவிடுவதை இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 02. தொழில்நுட்பம் (பதவிக் குரிய தொழில்நுட்ப மற்றும் விடயப் பரப்புடன் கூடிய பரீட்சையாகும்.) | பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவை அளவிடும் செயற்பாடு இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |

08. **பரீட்சைக் கட்டணம்** : பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். மேலும் இக்கட்டணத்தை நாட்டில் எந்தவொரு தபாலகம்/ உபதபாலகத்தில் பணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். இக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும் மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவ்வாறே பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.

09. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதோடு A4 கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும். கணினியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பயன்படுத்த முடியும் விண்ணப்ப இலக்கம் 1.0 தொடக்கம் 3.3 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 4.0 தொடக்கம் 5.2 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் மீதமுள்ளவை 3 மற்றும் 4 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை தனது கையெழுத்தினால் விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஆ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட

விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாது விடின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றி விண்ணப்பதாரி மீண்டும் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

(இ) முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் 2022.02.07 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "தேசிய சுவடிகள்கூட பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம், பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை இட்டனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சியளித்தல் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021" என்று தெளிவாக எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையின்/ அரசாங்க கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றுவோர் விண்ணப்பிப்பதாயின் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால், அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ ஓய்வு பெற்ற ஒரு உத்தியோகத்தர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படை இராணுவத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க அல்லது மாகாண சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு அல்லது ஏனைய மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர்களைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(உ) முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தபாலில் தொலைந்து போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சை வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரிட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்து அறிவித்தலொன்று பத்திரிகைகளிலும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடாத்தப்படும் அறிவித்தல் வெளியிடப்பட்டு குறைந்தபட்சம் 02 அல்லது 03 நாட்களுக்கு பின்னரும் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நிவர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை பிரவேசப் பத்திர நிழற்படப் பிரதியொன்றை பெறுவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் 011 2784232 என்ற பெக்ஸ் இலக்கத்தின் ஊடாக அனுப்பி வினவுவது மிகவும் பயனுறுதி வாய்ந்ததாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தம்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

10. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) சகல விதத்திலும் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தனது பரீட்சை அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு உரிய அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில் அம்மண்டப பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவர் எனக் கருதப்படமாட்டார்.

(இ) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

11. **போலியான தகவல்களுக்கான தண்டனை** : எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

12. இவ்விதிமுறைகளைக் கருத்திற் கொள்ளாத விடயங்கள் தொடர்பில் தேசிய சுவடிகள்கூடப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்

தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம்.

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்,
இலக்கம் 07, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07,
2022, சனவரி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் சுவடி மீள்வடிவமைப்பாளர் பயிற்சியளித்தல் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

**Open Competitive Examination for Recruitment to the post of Supervising Management Assistant Technical Services Category Archival Reprographer Training Grade of the Department of National Archives** - 2021

1.0

1.1 பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :........................................................................
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKA)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :........................................................................
(உ-ம் : H. M. S. RATHNAYAKA)

1.4 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :........................................................................

2.0

2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :........................................................................

2.2 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :............................................................

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :............................................
............................

3.0

3.1 தேசிய ஆளடையாள அட்டை இல. :

3.2 பால் நிலை: ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.3 தொலைபேசி இலக்கம் : கையடக்க :
வதிவிடம் :

4.0

4.1 பிறந்த திகதி :
வருடம் : மாதம் : திகதி :

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

5.0 கல்வித் தகைமைகள் :

5.1 க. பொ. த. (சா.த.) - முதற் தடவை :

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : | |
| பரீட்சை சுட்டிலக்கம் : | |

| *விடயம்* | *சித்திகள்* | *விடயம்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5.2 க. பொ. த. (சா.த.) - இரண்டாம் தடவை :

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : | |
| பரீட்சை சுட்டிலக்கம் : | |

| *விடயம்* | *சித்திகள்* | *விடயம்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5.3 க. பொ. த. (உ.த.) :

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : | |
| பரீட்சை சுட்டிலக்கம் : | |

| *விடயம்* | *சித்திகள்* | *விடயம்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

6.0 பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.) :

(i) பணம் செலுத்திய தபாலகம்/ உப தபாலகம் :----.

(ii) செலுத்திய தொகை :----.

(iii) செலுத்திய திகதி :----.

(iv) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டு கழறாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருக்கவும்.) |

7.0 விண்ணப்பதாரியின் சான்றுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம், உண்மையானதும் சரியானதும் என சான்றுரைக்கின்றேன். வழங்கப்படும் தகவல்கள் போலியானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமாயின் நான் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எந்தவொரு இழப்பீடும் இன்றி நான் சேவையிலிருந்து இடை நிறுத்தப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்திருக்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும்

சான்றுரைக்கின்றேன். மேலும் அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :----.

---------------------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

8.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற .................................................. திரு./ திருமதி/ செல்வி ஆகிய நான், தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ............................... மாதம் ..................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் சான்றுப்படுத்துகின்றேன்.

சான்றுப்படுத்துநரின் கையொப்பம் :................................
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :...............................
பதவி :.........................................
முகவரி :...........................................
(உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

திகதி :.................................
குறிப்பு : விண்ணப்பத்தை சான்றுப்படுத்த வேண்டியது வர்த்தமானி அறிவித்தலின் 9 ஆம் பந்தியில் (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

9.0 நிறுவனத் தலைவரின் சிபாரிசு :

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................................... என்பவர் இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையில் பணியாற்றுகின்றார் என்பதோடு, அவர் மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவாராயின் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்.

.................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

திகதி :.......................
நிறுவனத் தலைவரின் பெயர் :......................
பதவி :.........................
சேவை நிலையத்தின் முகவரி :...............................................

01-103

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை”**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், “பொரல்லை” என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் ‘சுப்றீம் கோட்’ புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8” அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால்செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

***அட்டவணை - 2022***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 07.01.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.12.2021 |
| | | வியாழன் | 13.01.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.12.2021 |
| | | வெள்ளி | 21.01.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.01.2022 |
| | | வெள்ளி | 28.01.2022 | .. | நண்பகல் 12 | வியாழன் | 13.01.2022 |
| **பெப்புருவரி** | .. | வியாழன் | 03.02.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.01.2022 |
| | | வெள்ளி | 11.02.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.01.2022 |
| | | வெள்ளி | 18.02.2022 | .. | நண்பகல் 12 | வியாழன் | 03.02.2022 |
| | | வெள்ளி | 25.02.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.02.2022 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 04.03.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.02.2022 |
| | | வெள்ளி | 11.03.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.02.2022 |
| | | வெள்ளி | 18.03.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.03.2022 |
| | | வெள்ளி | 25.03.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.03.2022 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.